செ.வெ.எண்.16 நாள்: 08.11.2021

**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2021ஐ முன்னிட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் வரைவு வாக்குசாவடி பட்டியல் ஆட்சேபனைகள் தொடர்பாக கலந்தாலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது**

---

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2021ஐ முன்னிட்டு அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோருடன் வரைவு வாக்குசாவடி பட்டியல் ஆட்சேபனைகள் தொடர்பாக கலந்தாலோசனை கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (08.11.2021) நடைபெற்றது. தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திருமதி.சாருஸ்ரீ, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.கி.செந்தில்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தில் 2021 நகர்ப்புற உள்ளாட்சி சாதாரண தேர்தல் ஒரு மாநகராட்சி இரு நகராட்சிகள் மற்றும் 18 நகர பேரூராட்சிகளுக்கு வாக்குச்சாவடி பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் வாக்குச் சாவடி பட்டியல்கள் ஒப்புதல் பெறப்பட்டு 07.01.2021 அன்று சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பொதுமக்கள் பார்வைக்காகவும் வெளியிடப்பட்டது. மேற்காணும் வாக்குச் சாவடி பட்டியல்களில் ஏதேனும் ஆட்சேபணைகள் உள்ளனவா என்பது குறித்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர்(கள்) மற்றும் பொது மக்கள் ஆகியோருடன் கலந்தாலோசிப்பதற்கானக் கூட்டத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் இன்று நடைபெற்றது. இதில் தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் உள்ள வாக்குச் சாவடி பட்டியல்களில் 3 ஆட்சேபணைகள் மட்டும் தெரிவித்து இருந்தனர். மேற்காணும் வாக்குச் சாவடி பட்டியல்களின் ஆட்சேபணைகள் எழுத்து பூர்வமாக வழங்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. வரப்பெறும் வாக்குச் சாவடி பட்டியல்களின் ஆட்சேபணைகள் பரிசீலனை செய்து 09.11.2021க்குள் இறுதி வாக்குசாவடி பட்டியல் வெளியிடப்படும். தூத்துக்குடியில் நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் மொத்தம் 737 வாக்குசாவடிகள் உள்ளது. அதில் 315 அனைத்து வாக்காளர்களுக்கான வாக்குசாவடி, 211 ஆண் வாக்காளர்களுக்கான

வாக்குசாவடி, 211 பெண் வாக்காளர்களுக்கான வாக்குசாவடி உள்ளது என தெரிவித்தார்.

கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கண்ணபிரான், மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திரு.ருக்மணி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து கட்சி பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.